1971 ஜூலை 21]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்கள் தங்களுடைய தகுதியை உயர்த்திக்கொண்டு, பி.டி. அஸிஸ்டென்ட் வேலை பார்க்கும் தகுதி பெறும்போது அந்த வேலைகளை அவர்களுக்குத் தரலாம் என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இடங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு அந்த இடங்களை வழங்கலாம்.

* 341 வினா—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா--

செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்ற பட்டதாரி ஆசிரியர்களைப் புதிதாக வேலைக்கமர்த்தும்போது மேற்கண்டவர்களுக்கு சர்வீஸ் அடிப்படையில் முதலிடம் அளித்து வேலையில் அமர்த்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசினர் பள்ளிகளிலும் கழக உயர்நிலைப்பள்ளிகளிலும் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களில் பட்டப்படிப்பும், பி.டி. ஆசிரியர் பயிற்சியில் தேர்வும் பெற்றவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற தமிழ்நாடு கல்வி சார்புப் பணி தனி விதிகளிலும், மாவட்டக் கழகச் சட்ட விதிகளிலும் போதிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. உதவி பெறும் தனியார் பள்ளிகளில் நிர்வாகத்தினருக்கு அம் மாதிரிப் பதவி உயர்வு அளிக்க உரிமையுள்ளது.

திரு. என். மருதாசலம் : செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக மாறும்போது அவர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய ஸீனியாரிடி பிரகாரம் பதவி உயர்வு கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்கள் தகுதி பெற்றதற்குப்பிறகு பி.டி. ஆசிரியர்கள் ஆகிறார்கள். அதிலேதான் ஸீனியாரிடி பார்க்க முடியுமேதவிர, செகண்டரி கிரேடு ஆசிரியராக எத்தனை ஆண்டுகள் ஸீனியராக இருந்தார்கள் என்று பார்ப்பதற்கில்லை. பி.டி. ஆசிரியராக ஆகும்போது அந்த ஸீனியாரிடியை இந்த ஸீனியாரிடியோடு கொண்டுபோய் ஒப்பிட முடியாது. பி.டி. தகுதி பெற்று அவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது அதற்குப் பிறகு பி.டி. ஆசிரியர்களைப் பொறுத்து வருகிற ஸீனியாரிடியோடு அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : செகண்டரி கிரேடு ஆசிரியாகப் பணியாற்றியவர்கள் பி.ஏ., படித்து நேரடியாக உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களாகப் போவதற்குப் பதில் அவர்கள் பி.டி. ட்ரெயினிங் பெற வேண்டும் என்ற நிலைமையைத் தவிர்த்து, அவர்களுக்கு, நேரடியாகப் பதவி உயர்வு கொடுக்கும் வாய்ப்பை அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் பாடம் கற்றுக்கொடுக்க பி.டி. ட்ரெயினிங் இருக்க வேண்டும் என்ற நியதி இருக்கிறது. அந்த பி.டி. பயிற்சி பெற்று அதற்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக்கொண்டால்தான் பி.டி. அஸிஸ்டெண்டாக உயர்த்த முடியுமேதவிர, நேரடியாக உயர்த்துவதற்கில்லை. பி.ஏ., பி.டி. படித்தவர்களை பி.டி. ஆசிரியர்களாக நியமிப்பதிலே தடை இல்லை. அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுக்கு முதல் சலுகை தரலாம் என்ற அளவுக்குக்கூட நிலைமை இருக்கிறது.

High Power Committee for Madras Corporation

* 342 *Q*.—Thiru N. K. PALANISAMI :
DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the High Power Committee constituted by the Government to study the Madras Corporation's financial position, and make suggestions to improve its finance has submitted its report; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Is it not a fact that the Government appointed a High Power Committee consisting of Mr. S. Venkitaramanan, Secretary to the Government, Finance Department and Mr. E.C.P. Prabakar, Secretary to the Government on July 16th? This was also published in all the Dailies. We also got the information confirmed. May I know whether the Government are also concerned about the deplorable manner in which the funds allotted under different Heads are spent? Supposing the Government give funds under a particular Head to be spent under that particular Head, have the Government observed that in a number of cases there is transfer of funds? Is it because of this that the Government seriously considered the need to appoint a Committee or have the Government having alternative plan to exactly find out how to examine the accounts of this Corporation, whether they are spending the money under proper Heads or not?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர் அவர்கள் அந்தக் குழு அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டதா என்று கேட்டார்கள். இல்லையென்று சொன்னேன். அமைக்கப்பட்ட குழு பரிசீலனை செய்துவருகிறது. அந்தக் குழுவிலே பலரும் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள், மாநகராட்சியினுடைய நிதி நிலைமை வசதிகளை எல்லாம் சீர்படுத்துவதற்காக யோசனைகளைக் கூறுவதற்காக என்று அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.